# Gospel Truth

# காஸ்பெல் ட்ரூத்

உலகளாவிய திருச்சபைகளை ஊக்குவிப்பதற்கான வேதாகம விளக்கங்கள்

ISSUE - 40 International Editor : MICHAEL W.SMITH இதழ் - 40


## மேய்ப்பனால் வழிநடத்தப்படுதல்

நான் என்ன செய்ய வேண்டும்? நான் இங்கே இருக்கலாமா?அங்கே செல்லலாமா? என்னுடைய படிப்பை தொடரலாமா? என்னுடைய தொழில் பாதை எது? இவர்தான் நான் திருமணம் செய்ய வேண்டிய நபரா?

நான் எந்த சபைக்கு செல்வது? எது எதை நான் என்ன செய்ய கர்த்தர் விரும்புகிறார்? நான் எப்படி வாழ அவர் சித்தமாய் இருக்கிறார்? இந்த சூழ்நிலையை எப்படி எதிர் கொள்வது? என் வாழ்வில் நான் சந்திக்கும் இந்த சவாலை எப்படி எதிர்கொள்வது என்று எனக்கு தெரியவில்லை நான் குழப்பங் களில் மூழ்கி இருக்கிறேன்.



வாழ்க்கை முழுவதும் கேள்விகள், குழப்பங்கள் பல வகையான முடிவுகள் இவை எல்லாம் சந்தித்துக் தான் இருக்க வேண்டும். சில முடிவுகள் பல தொலைதூர விளைவுகளை உண்டாக்க கூடியதாக அமைகிறது. சில முடிவுகள் வாழ்க்கையின் பாதையை தடம் புரளச் செய்துவிடும். வியக்கத் தக்க ஒரு உண்மையை கூறுகிறேன் கேளுங்கள், நீங்கள் உங்களுடைய சுய ஞானத்தின்படி சவால்களை சந்திக்க வேண்டியதில்லை. தேவன் உங்கள் வாழ்க்கைக்கான திட்டத்தை வைத்திருக் கிறார். முதன்மையாக அவர் உடல் ஆவிக்குரிய வாழ்வின் வழிகாட்டியாக இருப்பதோடு மாத்திர மல்ல உங்களுடைய எல்லா காரியங்களிலும் அவர் உங்களோடு இருப்பதை விரும்புகிறார்.

பல ஜனங்கள் தங்களுடைய சொந்த ஞானம், அறிவு, உள்ளார்ந்த உணர்வு, என்னும் இவைகளை மாத்திரமே நம்பி பல முடிவுகளை எடுப்பார்கள். நம்மை சுற்றி வாழ்கிற ஜனங்களின் வாழ்க்கை முறை விளைவுகள், ஆதாரங்களைக் கொண்டு சத்திய வேதத்தில் குறிப்பிட்டுள்ள வசனம் நினைவிற்கு வருகிறது. எரேமியா 10 : 23-ல் கர்த்தாவே, மனுஷனுடைய வழி அவனாலே ஆகிறதல்லவென்றும் தன் நடைகளை நடத்துவது நடக்கிறவனாலே ஆகிறதல்ல வென்றும் அறிவேன். சிருஷ்டித்தவருடைய வழிகாட்டுதலின்றி சிருஷ்டிக்கப்பட்ட எந்த மனுஷனும் நடக்க இயலாது. மனுஷனுடைய முடிவுகள் அவலட்சணமான விளைவுகளை உண்டாக்க கூடியவைகளாக அமையும். மனுஷனுக்குச் செம்மை யாய்த் தோன்றுகிற வழி உண்டு அதன் முடிவோ மரண வழிகள் (நீதி 16 : 25). எல்லாம் புரிந்து கொள்ளு தலும் ஞானமுடைய சர்வ வல்லமையுள்ள மீட்பரும் நம் நண்பருமாகிய இயேசு கிறிஸ்து உங்கள் வாழ்வில் உங்களோடு பயணிக்க விரும்புகிறார். நீங்கள் அவரை உங்கள் வாழ்வில் ஏற்றுக்கொண்டால் பரலோக பாதையில் உங்களை நடத்துவதோடு மாத்திரமல்ல, நீங்கள் சந்திக்க வேண்டிய சவால்களில் முடிவெடுக்கவும் வாழ்வின் எல்லா தருணங்களிலும் உங்களோடு இருந்து உங்களை நடத்த அவர் வல்லவர். கர்த்தர் உங்களுடைய காரியங்களை அவருடைய இருதயத்தில் வைத்திருக்கிறார். மேலும் உங்கள் வாழ்வின் சவால்களை சந்தித்து, உங்களை வெற்றிகரமாக வழிநடத்துவார். நிச்சயமற்ற பல காரியங்கள் நம் வாழ்வில் துயரத்தையும் வேதனையும் கொண்டு வரும்போது, அவர் ஒருநாளும் உங்களை இருளின் அந்தகாரத் திலும், குழப்பத்திலும் விடவேமாட்டார். கண்ணீர் களின் நடுவிலும் உங்களை நடத்துகிற நல்ல மேய்ப்பன் அவர். அவர் உங்களையும் கூட நம்மை நடத்துகிற உண்மையுள்ள தேவன் .


**கர்த்தர் உங்களுடைய காரியங்களை அவருடைய இருதயத்தில் வைத்திருக்கிறார். மேலும் உங்கள் வாழ்வின் சவால்களை சந்தித்து, உங்களை வெற்றிகரமாக வழிநடத்துவார்**



| | | | | |
|---|---|---|---|---|
| தலையங்கம் | வேதபாடம் தேவசித்தம் அறிவது எப்படி | துணை கட்டுரை தேவசித்தம் அறிவது எப்படி | கேள்வி & பதில் | உங்களுக்கு தெரியுமா? ஏற்ற சமயத்தில் ஒரு வார்த்தை ஆலோசனையின் தேவன் |
| 3 | 4 | 5 - 8 | 9 | 10 |

# வேதாகமம்,



## நமக்கு போதிப்பது என்ன..... ?

**தேவனுடைய வார்த்தை**
2 தீமோ 3 : 16-17 ; 2 பேது 1 : 20-21 ; மத் 24 : 35

**அன்பு**
மத் 22 : 37-40 ; யோவா 14 : 21-23, 1 யோவா 4 : 7-11

**மனந்திரும்புதல் :**
அப் 3 : 19 ; 17 : 30 ; 2 கொரி 7 : 10

**புதுசிருஷ்டி**
யோவா 3 : 3-7 ; 2 கொரி 5 : 17 ; ரோம 6 : 1-4, எபே 2 : 1, 5-6

**பாவத்திலிருந்து விடுதலை**
1 யோவா 5 : 18 ; மத் 1 : 21 ; யோவா 8 : 11

**பரிசுத்த ஆவியால் நிரப்பப்படுதல்**
அப் 1 : 8 ; 15 : 8-9 ;19 : 2

**பரிசுத்தம் :**
லூக் 1 : 73-75 ; எபி 12 : 14 ; 1 பேது 1:15-16 ; தீத்து 2 : 11-12 ; ரோம 6 : 22

**தேவனுடைய இராஜ்யம்**
லூக் 17 : 20-21 ; ரோம 14 : 17 ; யோவா 18 : 36.

**சபை-** அப் 2 : 47 ; எபே 4 : 4-6 ; 1 கொரி 12 : 12-13 ; கொலோ 1 : 18

**ஒற்றுமை**
யோ 17 : 20-23 ; கலா 3 : 28 ; வெளி 18 : 2-4

**நியமங்கள்**
மத் 28 : 19-20 ; 26 : 26-30 ; 1 கொரி 11 : 23-27 ; யோவா 13 : 14-17

**தெய்வீக சுகமளிப்பு**
லூக் 4 : 18, ஏசா 53 : 4,5, யாக் 5 : 13-16

**விவாக முறைமை**
மத் 19 : 5-6 ; லூக் 16 : 18 ; ரோம 7 : 2-3 ; 1 கொரி 7 : 10, 11

**வெளிப்புற தோற்றம்**
1 தீமோ 2 : 9-10 ; 1 கொரி 11 : 14-15 ; உபா 22 : 5

**கடைசிகாலம்**
2 பேது 3 : 7-12 ; யோவா 5 : 28 ,29 ; 2 கொரி 5 : 10 ; மத் 25 : 31-46

**தொழுதுகொள்ளுதல்**
யோவா 4 : 23,24 ; எபே 5 : 19 ; 2 கொரி 3 : 17

**சுவிசேஷம் அறிவித்தல்**
மாற் 16 : 15

யோவான் எழுதின நிருபம் 10 ஆம் அதிகாரத்தில் இயேசுகிறிஸ்து நல்ல மேய்ப்பனாக இருப்பதைக் குறித்து கூறியுள்ளார். ஆடுகளும் அவர் சத்தத்திற்குச் செவிகொடுக்கிறது .அவன் தன்னுடைய ஆடுகளை பெயர் சொல்லிக் கூப்பிட்டு, அவைகளை வெளியே நடத்திக் கொண்டு போகிறான். அவன் தன்னுடைய ஆடுகளை வெளியே விட்ட பின்பு, அவைகளுக்கு முன்பாக நடந்து போகிறான். ஆடுகள் அவன் சத்தத்தை அறிந்திருக்கிறபடியானால் அவனுக்கு பின் செல்கிறது. அந்நியருடைய சத்தத்தை அறியாதபடியினால்

அவைகள் அந்நியனுக்கு பின் செல்லாமல் அவனை விட்டு ஓடிப்போகும் என்றார் (வசனம் 3 - 5). இயேசு உங்கள் பெயரை அறிந்திருக்கிறார். உங்கள் முன்பாக இருக்கும் தீர்மானங்களையும் எதிர்கொள்ள வேண்டிய சவால்களையும் பார்த்துக் கொண்டிருக்கிறார். இயேசுவின் சத்தம் உங்கள் உணர்வுகளையும் எண்ணங்களையும் ஊடுருவி சென்று உங்களை அவர் தேற்றி வழி காட்டுவார்.

**இந்த விசுவாசத்தினால் தேவன் நமக்கு தந்திருக்கும் வரங்கள் வல்லமைகள் தேவையான உலக சம்பத்துக்கள் இவையெல்லவற்றிலும் நம் வாழ்வில் அவருடைய விருப்பத்தை அறிந்து கொள்ளலாம்**

இயேசு உங்கள் முன்பாக செல்லும் பாதையை செவ்வைப்படுத்துவார். ஆனால் நீங்கள் அவரை பின்பற்றுவீர்களா? தேவபிள்ளைகள் மேய்ப்பனுடைய சத்தம் அறிந்து அவரைப் பின்பற்றி மற்ற எல்லா வழிகளையும் விட்டு விலகுங்கள் அந்நியருடைய சத்தத்திற்கு செவிகொடுப்பீர்களானால் தேவனுடைய வார்த்தையையும், பரிசுத்த வாழ்வையும், கிறிஸ்துவையும் விட்டு வெகு தூரம் சென்று விடுகிறீர்கள்.

சில சமயங்களில் தேவனுடைய வழிகாட்டுதல் இல்லாததைப் போல தோன்றும். ஆனால் நீங்கள் அமர்ந்திருந்து தேவசத்தத்தை அறியும் போது அவர் உங்களைத் தேற்றி நீதியின் பாதையில் நடத்துவார். நாம் தவறுகிறவர்கள் ஆதலால் நம் சுய எண்ணத்தை சாராமல் கர்த்தருடைய வழிகளில் நிலைத்து நிற்பீர்களாகில், தேவசமாதானமும், ஜெயமும் உங்கள் இருதயங்களை ஆண்டு கொள்ளும்.

நம் சுய விருப்பங்களுக்கும் மேலாக நீங்கள் தேவ சித்தத்தை அறிந்துகொள்ள நாடுவீர்களானால் நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டிய காரியங்களை சரியான நேரத்தில் அவர் வெளிப்படுத்துவார். இந்த விசுவாசத்தினால் தேவன் நமக்கு தந்திருக்கும் வரங்கள் வல்லமைகள் தேவையான உலக சம்பத்துக்கள் இவையெல்லாவற்றிலும் நம் வாழ்வில் அவருடைய விருப்பத்தை அறிந்து கொள்ளலாம் நாமும் சில சமயங்களில் தேவனுடைய பாதையை பின் தொடர்கையில் சில தவறுகளை செய்து விடலாம். ஆனால் கர்த்தருக்குள் வளரும் போது அவருக்கு செவி சாய்க்கும் போது அவருடைய சத்தியத்தையும் வழியையும் இன்னும் தெளிவாக புரிந்துகொள்ளலாம். கர்த்தர் தம்முடைய பிள்ளைகளை நடத்துகிறார். ஆவிக்குரிய வழிகாட்டியாய் பிதாவின் சித்தம் செய்ய நம்மை நடத்துகிறார். எல்லா முடிவுகளிலும் நம் மேய்ப்பனின் வழிகாட்டுதல் இருக்கும் அனுதினமும் கருத்தோடு மேய்ப்பனின் வழிகளில் நடப்போம்.

தாங்க முடியாத வேதனை குழப்பம் தெளிவற்ற சூழ்நிலைகளில் மிகப்பெரும் ஆறுதலின் தேவனாய் அவர் நம்மை தேற்றி அரவணைப்பார். அவருடைய வார்த்தையினால் பரிசுத்த ஆவியானவரால் ஞானமாய் நம் மேல் இரக்கம், தயை பாராட்டுவார். தேவனுக்குக் காத்திருப்போம் மேய்ப்பனானவர் நம்மை நடத்துவார்.

*கர்த்தரின் சத்தியத்தை உலகமெங்குமுள்ள சகல சிருஷ்டிகளுக்கும் பிரசங்கித்து, ஊக்கப்படுத்தி, உற்சாகப்படுத்துவதுதான் இந்த இதழின் முக்கிய நோக்கம். எங்களுடைய இதழை ஆன்லைனில் படிக்க* www.thegospeltruth.org *என்ற இணையதள முகவரியை பார்க்கவும். உங்களது கிறிஸ்தவ நண்பர்கள் மற்றும் தெரிந்த விசுவாசிகளுக்கு இந்த இதழை அறிமுகம் செய்யுங்கள். அவர்களது முகவரிகளையும் எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். தமிழ்மொழியல்லாது வேறு பல மொழிகளிலும் பல நாடுகளில் இந்த இதழை அச்சிட்டு வெளியிடுகிறோம். இந்த பத்திரிகை தொடர்ந்து வெளிவர ஆதரவு தாருங்கள். படங்கள் அனைத்தும் அனுமதியோடே அச்சிடப்பட்டுள்ளது. உங்கள் கருத்துக்களையும் நன்கொடைகளையும் அனுப்பவேண்டிய முகவரி :-*

**ஆயர். W.S.வேதா, காஸ்பெல் ட்ரூத், 2/227 கோலார்பட்டி,**
**பொள்ளாச்சி வட்டம், தென் இந்தியா - 642 107**

# ஆசிரியரின் தலையங்கம்

Editorial

அவர்கள் இரவும் பகலும் வழிநடக்கக்கூடும்படிக்கு, கர்த்தர் பகலில் அவர்களை வழிநடத்த மேகஸ்தம்பத்திலும், இரவில் அவர்களுக்கு வெளிச்சங்காட்ட அக்கினி ஸ்தம்பத்திலும் அவர்களுக்கு முன் சென்றார் யாத் 13 : 21.

இஸ்ரவேலராகிய தம்முடைய ஜனங்களுக்கு முன்பாக கர்த்தராகிய தேவன் பகலிலே மேகஸ்தம்பத்திலும் இரவிலே அக்கினி ஸ்தம்பத்திலும் வழிகாட்டுவார். அதே தேவன் இன்றும் தம்முடைய பிள்ளைகளை காக்க வல்லவர். பரலோகத்துக்கு அடுத்த காரியங்களை தம்முடைய பிள்ளைகள் சிந்திக்கும் படியாக நம்மை வைத்திருக்கிறார். ஞானத்தின்படி சிந்தித்து செயல்படும்படி விட்டுவிட மாட்டார். அவர் உன்னோடேகூட இருந்து உன்னை நடத்துவேன் என்று வாக்கு பண்ணியிருக்கிறார். இந்த இதழில் தேவ சித்தம் அறிந்து நடப்பது எப்படி என்று எழுதும்படியாக ஏவப்படுகிறேன். நான் எப்படி தேவ சித்தத்தை அறிந்து கொள்வது? பல இளைஞர்கள் மற்றும் கிறிஸ்தவர்களின் கேள்வி இதுதான். ஒரே மாதிரியான வழியை ஒரு எதார்த்தம் போல் நாம் சொல்லிவிடமுடியாது, எப்படியானாலும், அவர் நம்மை நடத்துவேன் என்று வாக்கு பண்ணியிருக்கிறார். அவர் தமது சித்தத்தை நாம் அறிந்து கொள்ளவேண்டிய வழிகளையும் நமக்கு போதித்திருக்கிறார். தேவனோடு நேரத்தை செலவிட்டு அனுபவித்து கற்றுக்கொள்ளுங்கள் அவரை சார்ந்து செயல்படுங்கள். கர்த்தருடைய நேரம் தனித்துவமானது. சில நேரங்களில் என் ஜெபத்திற்கு பல மாதங்களாகியும் பதில் வரவே செய்யாது. பின்பு கர்த்தர் பேசுவார், அப்போதுதான் குழப்பம் நீங்கி தெளிவு பிறக்கும். ஒரு பாடலின் வரிகள் இதோ "இனிமையான அவரின் சித்தம் அறிந்தவன் நான்" ஆம் நாம் தேவனுக்கு நன்றி செலுத்தக்கடவோம் தேவ சத்தம் தனித்துவம் வாய்ந்தது. நம் சொந்த வாழ்வில் கிறிஸ்துவின் சித்தம் செய்யும் வழிகளை நாம் அறிந்து கொண்டு தேவனோடு தொடர்பு கொள்ள நாம் பார்க்கப் போகிறோம். ஒன்று, இரண்டு சாட்சிகளின் வாயிலாக நாம் அதை தியானிப்போம்.

கொள்ளை நோய்க்கு எதிராக எச்சரிக்கும் போது கர்த்தர் இன்னும் சில வேளைகளில் அவைகளை பயன்படுத்துகிறார் ஆவியானவரின் கிரியை நடக்கும் காலம் வருகிறது என்று நாங்கள் முழு நிச்சயமாய் நம்பின ஒரு மாற்றம் எனக்கு நினைவில் இருக்கிறது இயற்கையாய் அது உண்டாகவில்லை. கொஞ்ச நாட்களுக்கு பிறகு தேவன் தம் வார்த்தையை பரிசுத்த ஆவியானவரின் வழிகாட்டுதலோடு அதை உறுதிப்படுத்தினார். என் வாழ்வின் விளிம்பில் நின்ற சமயம் தேவனிடத்திலிருந்து எனக்கு ஒரு சாட்சி தேவைப்பட்டது. தேவ சத்தம் தெளிவாய் கேட்காத வேலையில் இதுவாக இருக்குமோ என்று தோன்றியது. ஆனால் மீண்டும் தெளிவான ஒரு உரையாடலோடு தேவனோடு இடைப்பட்ட புதிய தைரியம் உண்டானது. தேவனுடைய வார்த்தையை தொடர்ந்து விசுவாசித்து வாழ்க்கை பயணத்திலே ஓடிக்கொண்டிருக்கிறேன் உங்கள் விசுவாசம் வெளிப்படவே இதை எழுதுகிறேன்.

தேவன் நம்மை தேற்றி, பாதுகாத்து நடத்தி வருகிறபடியால் அனுதினமும் அமைக்கப்படும் கிறிஸ்தவர்களாகிய நீங்கள் ஒவ்வொருவரும் உங்கள் திருமணம், தொழில், பொருளாதாரம், ஆராதனை, இன்னும் வாழ்வின் முக்கியமான முடிவுகள் எல்லாவற்றிலும் தேவனுடைய வழிகாட்டுதலை நாடுங்கள், அவரை தேடி விசுவாசித்தால் தேவனுடைய வழிகளை நம் வாழ்வில் பெற்றுக்கொள்ளலாம்

**உன் சுயபுத்தியின்மேல் சாயாமல், உன் முழு இருதயத்தோடும் கர்த்தரில்**

*நம்பிக்கையாயிருந்து,*

**உன் *வழிகளிலெல்லாம்* அவரை நினைத்துக்கொள்; அப்பொழுது**

**அவர் உன் பாதைகளைச் செவ்வைப்படுத்துவார் நீதி 3 : 5 - 6.**

ஆன்லைனில்

**அதிகமாக தெரிந்துகொள்ள**

*www.thegospeltruth.org*

**பதிவுசெய்து வெளியீட்டு காப்பகங்களுக்குள் உள்நுழைக**



# வேதபாட வழிகாட்டி

## பொருள் : தேவசித்தம் அறிந்து நடப்பது எப்படி?

**வேத வாசிப்பு :** ஆகையால், நீங்கள் மதியற்றவர்களாயிராமல், கர்த்தருடைய சித்தம் இன்னதென்று உணர்ந்துகொள்ளுங்கள் - எபேசியர் 5 : 17

**செய்திச் சுருக்கம் :** கர்த்தர் நமக்கு தந்திருக்கும் தாலந்துகளினாலும் எல்லாவிதமான புத்தியினாலும் தேவனுடைய சித்தம் இன்னதென்று ஒவ்வொருவருடைய தனிப்பட்ட வாழ்விலும் நீங்கள் உணரலாம்.

### I.தேவசித்தத்தை அறிந்துகொள்வதன் முக்கியத்துவம்

**A.**எரேமியா 10 : 23 மனுஷனுடைய வழி அவனாலே ஆகிறதல்ல

**B.** நீதி 16 : 25 மனுஷனுடைய வழிகள் மரண வழிகள்

### II. நீங்கள் தேவசித்தம் அறியகூடும்

**A.**நீதி 3 : 6 உன் பாதைகளை செவ்வைப்படுத்துவார்

**B.** எபே 1 : 8-9 இரகசியத்தை எங்களுக்கு வெளிப்படுத்தினார்

**C.** கொலோ 1 : 9 அவருடைய சித்தத்தை அறிகிற அறிவினால்

### III. எல்லா ஜனத்தின் மீதான பொதுவான தேவசித்தம்

**A.**2 பேது 3 : 9எல்லோரும் மனந்திரும்ப வேண்டும்

**B.** ரோமர் 12 : 1-2 பரிபூரணமான தேவசித்தம்

**C.** 1 பேது 1 : 15-16 நடக்கைகளெல்லாவற்றிலேயும் பரிசுத்தராயிருங்கள்

**D.** 1 பேது 2 : 21-23 உங்களுக்கு மாதிரியைப் வைத்துப் போனார்

**E.** 1 தெச 4 : 3 பரிசுத்தமுள்ளவர்களாக வேண்டும்

**F.** 1 தெச 5 : 16-18 எப்பொழுதும் சந்தோஷமாயிருங்கள். இடைவிடாமல் ஜெபம் பண்ணுங்கள்.

### IV. தேவசித்தம் தேவன் எவ்விதம் வெளிப்படுத்துவார்

**A.தேவவார்த்தை**

1. சங் 119 : 105 பாதைக்கு வெளிச்சம்
2. 2 தீமோ 3 : 15-17 உபதேசத்துக்கானது

**B. பரிசுத்த ஆவி**

1. யோவான் 16 : 13 சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்துவார்
2. ரோமர் 8 : 14 தேவஆவியினாலே நடத்தப்படுவீர்கள்
3. ஏசாயா 30 : 21 உங்களுக்குப் பின்னாலே சொல்லும் வார்த்தையை உங்கள் காதுகள் கேட்கும்.

**C. தேவசத்தம்**

1. மத் 17 : 5 மேகத்திலிருந்து ஒரு சத்தம் உண்டாயிற்று
2. அப் 8 : 26 கர்த்தருடைய தூதன் பிலிப்புவுக்கு அறிவுறுத்துகிறார்

**D. மனுஷனின் திறமைகள்**

1. எபேசி 4 : 11- 13 ஊழியம்
2. எபி 13 : 17 கீழ்ப்படிந்து அடங்குங்கள்
3. நீதி 11 : 14 ஆலோசனைக்காரர்

**E. முன் குறித்தல்**

1. ரோமர் 8 : 28 சகலமும் நன்மைக்கேதுவானது
2. அப் 16 : 6-7 பவுலுடைய திட்டம் தடைசெய்யப்பட்டது

**F. மயிருள்ள தோல்**

1. நியா 6 : 36- 40 கிதியோன் மயிருள்ள ஒரு தோலை போடுகிறார்
2. மத் 12 : 38-40 அடையாளத்தை தேடுகிறார்கள்

**G. தரிசனங்களும் சொப்பனங்களும்**

1. அப் 2 : 17 ஆவியானவரே தரிசனங்களையும், சொப்பனங்களையும் தருவார்.
2. மத் 2 : 13 தூதனால் யோசேப்பு எச்சரிக்கப்பட்டார்
3. அப் 10 : 9-10, 19-20 பேதுருவின் தரிசனம். கர்த்தரால் நிச்சயிக்கப்பட்டது.

### V. தேவசித்தம் காண்பது எப்படி

**A.வாஞ்சையோடு தேடுவோம்**

1. மத் 6 : 33 முதலாவது தேவனைத் தேடுங்கள்
2. சங் 143 : 10 உமக்குப் பிரியமானதைச் செய்ய எனக்குப் போதியும்
3. சங் 25 : 4-5,9 உம்முடைய சத்தியத்திலே என்னை நடத்தும்
4. நீதி 3 : 5-7 உன் வழிகளிளெல்லாம் அவரை நினைத்துக்கொள்.

**B. விசுவாசத்தோடு ஜெபியுங்கள்**

1. யாக் 1 : 5-6 தேவனிடத்தில் கேட்கக்கடவன்

**C. தேவனோடு கிட்டிச் சேருங்கள்**

1. ஓசியா 6 : 3 அறிவடைந்து, கர்த்தரை அறியும்படி போவோம்
2. யாக் 4 : 8 தேவனிடத்தில் சேருங்கள்.

**D. கவனியுங்கள்**

1. சங் 46 : 10 நீங்கள் அமர்ந்திருங்கள்
2. யாக் 1 : 19 கேட்கிறதற்கு தீவிரப்படுங்கள்

**E. பொறுமையோடே காத்திருங்கள்**

1. சங் 27 : 14 கர்த்தருக்குக் காத்திரு

**F. தேவசித்தத்திற்கு அர்ப்பணியுங்கள்**

1. மத் 23 : 37 மனதில்லாமற் போயிற்று
2. லூக் 22 : 42 என் சித்தப்படியல்ல

### VI. கீழ்ப்படிதல்

1. எபே 6 : 6-7 நல்மனதோடே
2. ஏசாயா 1 : 19 மனம்பொருந்தி செவிகொடுத்தல்

**முடிவு :**

உலகமும் அதின் இச்சையும் ஒழிந்துபோம்; தேவனுடைய சித்தத்தின்படி செய்கிறவனோ என்றென்றைக்கும் நிலைத்திருப்பான் - 1 யோவான் 2 : 17

காஸ்பெல் ட்ருத்

# தேவ சித்தத்தை அறிந்து கொள்வது எப்படி




**கர்த்தருடைய பொதுவான சித்தத்தின் மேல் அமைந்த தனிப்பட்ட மனுஷனுக்கான கர்த்தருடைய வழிகாட்டுதல்கள் குறித்த தேடுதல்கள் அமைய வேண்டும்**

**கர்த்தருடைய விருப்பம் தேவபிள்ளைகளோடு ஐக்கியப்பட வேண்டும் என்பதே.அவர் நம்மை வழிநடத்துவேன் என்று வாக்குப்பண்ணியிருக்கிறார். தேவ ஞானத்தையும், வரங்களையும் நாடும்போது தனிப்பட்ட ஒவ்வொரு வருடைய வாழ்விலும் தேவசித்தம் அறியமுடியும்.ஆகையால், நீங்கள் மதியற்றவர்களாயிராமல், கர்த்தருடைய சித்தம் இன்னதென்று உணர்ந்துகொள்ளுங்கள் (எபேசி 5 : 17).**

## தேவன் தம்முடைய சித்தத்தை வெளிப்படுத்த விரும்புகிறார்

### அநீதியின் பிறப்பிடம்

**வழிகாட்டுதலின் வாக்குத்தத்தங்கள்**
தேவனுடைய வாக்குத்தத்தங்கள் ஒவ்வொன்றும் நிச்சயமாய் ஒவ்வொருவருடைய வாழ்விலும் நிறைவேறும் நீதி 3 : 6. உன் வழிகளிலெல்லாம் அவரை நினைத்துக் கொள். அவர் உன் பாதைகளை செவ்வைப்படுத்துவார். தேவ பிள்ளைகளாகிய நாம் தேவனுடைய கிரியைகளுக்கு இடம் கொடுத்தால், தேவ திட்டங்களை அவர் வெளிப்படுத்துவார். தமக்குள்ளே தீர்மானித்திருந்த தம்முடைய தயவுள்ள சித்தத்தின்படி எங்களுக்கு அறிவித்தார். எபே 1 : 9. உலகமானது கிறிஸ்தவத்தை எதிர்த்து கேலியும் கிண்டலும் செய்தபோது தேவனுடைய பரிசுத்தவான்கள் எல்லா ஞானத்தோடும் ஆவிக்குரிய விவேகத்தோடும் அவருடைய சித்தத்தை அறிகிற அறிவினால் நிரப்பப்பட்டு (கொலோ 1:9). கர்த்தருக்கு பிரியமாக நடந்தார்கள். வாழ்வில் நாம் எதிர்கொள்ளும் சோதனை, பாடு, கஷ்டங்களில் தேவனுடைய பரம ஞானமும் வழிநடத்துதலும் இருக்கும் போது அதன் வழியாக கடந்து சென்று மேற்கொள்வது மிகவும் சரியாக இருக்கும். பல முக்கிய முடிவுகளில் உலகப்பிரகாரமான நமது ஞானத்தை தவிர்த்து சர்வவல்லவருடைய ஞானத்தையும் வல்லமையும் சார்ந்து இருக்கக் கடவோம்.

### தேவனுடைய பொதுவான விருப்பம்

மனுக்குலத்தின் மீது தேவன் கொண்டிருக்கும் திட்டம் ஒவ்வொருவருக்கும் தனித்துவமானது. தேவனுடைய பொதுவான விருப்பத்தின் மீதமைந்த தனிப்பட்ட ஒவ்வொரு மனுஷனுக்கும் தேவசித்தம் வெளிப்படும். ஆகவே அவரை உண்மையாக தேட வேண்டும் எல்லோரும் மனந்திரும்ப வேண்டுமென்று விரும்பி, நம்மேல் நீடிய பொறுமையுள்ளவராக இருக்கிறார் (2 பேது 3 : 9).

### சத்தியத்தை பேசுங்கள்

ஒவ்வொரு ஆத்துமாவும், பாவத்தினின்று மீட்கப்படவேண்டும் என்பதே தேவனுடைய விருப்பம். நீங்கள் இந்தப்பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷம்தரியாமல், தேவனுடைய நன்மையும், பிரியமும் பரிபூரணமுமான சித்தம் இன்னதென்று பகுத்தறியத்தக்கதாக உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள் (ரோம 12 : 1 – 2). தேவனுக்கெற்ற தயவுள்ள சித்தத்தின் அடிப்படையை நிறைவேற்றாமல், ஜெபிக்கும் சிலரது ஜெபமும் வீணானதாகவே அமைகிறது. பரிசுத்த வேதாகமத்தில் கூறப்பட்டுள்ள, தேவனுடைய சித்தத்தை அறிந்து அதன்படி முதலாவது வாழ நம்மை அர்பணிக்க வேண்டும்.

உங்களை அழைத்தவர் பரிசுத்தராயிருக்கிறது போல நீங்களும் உங்கள் நடக்கையில் எல்லாவற்றிலும் பரிசுத்தராக இருங்கள் (1 பேதுரு 1 : 15). தேவனை விட்டு பிரிந்து உலகத்தை நோக்கி கொண்டு செல்லும் ஒரு பாதைக்கான வழிகாட்டுதலில் நிச்சயமாக தேவசித்தம் இருக்காது. கிறிஸ்துவும் நீங்கள் தம்முடைய அடிச்சுவடுகளை தொடர்ந்து வரும்படி உங்களுக்கு மாதிரியை பின் வைத்துப் போனார் (1 பேது 2 : 21 – 23). 1 தெச 4 : 3ல் நீங்கள் பரிசுத்தம் உள்ளவர்களாக வேண்டும் என்பதே தேவனுடைய சித்தமாயிருக்கிறது. என்று சொல்லப்பட்டுள்ளது. உலகத்தினின்று பிரித்தெடுக்கப்படுவது எல்லாவற்றிலேயும் ஸ்தோத்திரஞ் செய்யுங்கள், அப்படிச் செய்வதே கிறிஸ்து இயேசுவுக்குள் உங்களைக் குறித்து தேவனுடைய சித்தமாயிருக்கிறது (1 தெச 5 : 16 – 18) .

# தேவ சித்தம் அறிய உதவும் கருவிகள்

**நம் வாழ்வில் உண்டாகும் பலவிதமான கேள்விகளுக்கு பதிலை தேவன் தந்த வரங்களினால் கட்டளைகளினாலும் அறிந்து கொள்ள முடியும். தேவனைப் பற்றி இருவேறு சாட்சி இந்த பூமியில் அவரை குறித்து சாட்சியளித்து மகிமைபடுத்தும் படியாக தந்துள்ளார் தேவனுடைய வார்த்தை மற்றும் சத்திய ஆவி**



**தேவன் தம் வார்த்தையினாலும், பரிசுத்த ஆவியினாலும் பேசும்போது ஒரு உள்ளார்ந்த உந்துதலையும், ஆவியிலே மெல்லிய சத்தத்தையும் உணர்ந்தால் அதுவே தேவனுடைய சத்தமாகும்.**

### 1.தேவனுடைய வார்த்தை

சங்கீதம் 119 : 105 சொல்கிறது உன்னுடைய வசனம் என் கால்களுக்கு தீபமும் என் பாதைக்கு வெளிச்சமாக இருக்கிறது. தேவனோடு அனுதினமும் வாழ்வதற்கான கற்பித்தல் கையேடு தான் வேதாகமம். ஆவிக்குரிய காரியங்களை மாத்திரமல்ல நம் அனுதின வாழ்விற்கு தேவையான பல கேள்விகளுக்கு பதிலாக வேதாகம வசனங்கள் உதவியாக அமையும். ஒரு மனிதனுடைய திருமணம் குழந்தைபேறு பொருளாதாரம் இன்னும் பல கேள்விகளுக்கு பதில் உண்டு.தேவனுடைய வார்த்தை தான் தேவ சித்தத்தை அறிய உதவும் வழி ஆனால் முழு இருதயத்தோடு வேதத்தை தியானித்தால் தான் தேவசித்தம் அறியமுடியும். வேதவாக்கியங்கள் எல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது.

தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும் எந்த நற்கிரியையுஞ் செய்யத் தகுதி உள்ளவனாக இருக்க வேண்டும் (2 தீமோ 3 15 – 17). தேடுகிற ஒவ்வொருவருக்கும் தேவனுடைய வசனமே பதில் உரைக்கும். வசனத்தை தவறாக புரிந்து கொண்டு ஒரு சூழ்நிலைக்கு சாதகமாக அதை மாற்ற விளையும் போது தான் தவறாகும். சில ஜனங்கள் தாங்கள் சில இடங்களுக்கு போகமதனாயிருந்து அச்சமயம் வேதத்தில் போ எனும் வசனத்தை கண்டோ அல்லது

அங்கேயே தங்கியிரு என்னும் வசனங்களை கண்டு அதை எடுத்துக் கொள்வார். இப்படியாக தேவ சித்தத்திற்கு மாறாக வேத புரட்டர்கள் தங்கள் விருப்பத்திற்கிணங்க தவறுதலாக புரிந்து கொள்வார். நேர்மையாய் தம்மை தேடுகிற ஆத்மாக்களுக்கே தேவன் வசனத்தின் மூலமாய் பதிலளிப்பார் .

### 2.பரிசுத்த ஆவி

தேவன் அவர் தம் பிள்ளைகளுக்கு பரிசுத்த ஆவியானவரின் வரங்களை தந்து உள்ளார். சத்திய ஆவியாகிய அவர் வரும்போது சகல சத்தியத்திற்கும் உங்களை நடத்துவார் யோவான் 16 : 13. மேலும் எவர்கள் தேவனுடைய ஆவியினாலே நடத்தப்படுகிறார்களோ அவர்கள் தேவனுடைய புத்திரராயிருக்கிறார்கள் ரோமர் 8 : 14. தேவ ஆவியானவரின் உந்துதலால் நாம் வழிகாட்டி நடத்தப்படுவதை அறிந்து கொள்வதற்கு கொஞ்சம் சமயம் தேவை. ஏசாயா தீர்க்கதரிசியின் புத்தகத்தில் வழி இதுவே இதிலே நடவுங்கள் என்று உங்களுக்கு பின்னாலேயே சொல்லும் வார்த்தையை உங்கள் காதுகள் கேட்கும் (ஏசா 30 : 21). பரிசுத்த ஆவியானவர் நம்மை நடத்தும்போது அது மனதில் தோன்றுகிற யோசனையாயிராமல், உள்ளத்தின் ஆழத்திலிலுருந்து நம்மில் பேசுகிற வண்ணமாய் இருக்கும் பரிசுத்த ஆவியானவர் நம்முடைய உள்ளத்தில் ஒரு ஏவுதலையும், இருதயத்திலே ஒரு பாரத்தையும் தந்து அதுவித்தியாசமான நடத்துதலாயும் தெளிவாகவும் இருக்கும். தேவ வார்த்தையும், ஆவியானவரின் வழி நடத்துதலும மாறாமல் ஒரேமாதிரியாக இருக்கும் சோதனை ஆய்வகங்களில் செய்வது போல சோதனை மாதிரிகளின் முடிவு, ஒரே போல இருக்கும்.

### 3.தேவ சத்தம்

மறுரூப மலையில் கர்த்தர் ஒளியுள்ள ஒரு வேகத்தின் மேலிருந்து சீஷர்களோடு பேசியதாவது, இவர் என்னுடைய நேசகுமாரன் இவரில் பிரியமாயிருக்கிறேன் இவருக்கு செவிகொடுங்கள் மத் 17 : 5. கர்த்தருடைய தூதன் பிலிப்பை நோக்கி நீ எழுந்து, காசா பட்டணத்துக்குப் போ என்றான் (அப் 8 : 26). ஒளியூட்டும் ஆவியானவரின் சத்தத்தைக் கேட்கும் மனுஷனுக்கோ அது, தெளிவாகவும், எந்த சந்தேகமுமின்றி நம்பப்படும் ஒன்றாகவும் அமையும்.

### 4.மனுஷனுடைய திறமை

தேவன் தம்முடைய வார்த்தையை விசுவாசிக்கிற யாவருக்கும் அவரை தேடுகிற வர்கள் மற்றவர்களுக்கும் சாட்சியாக வைக்கவே விரும்புகிறார். உலகில் பல சத்தங்கள் நம்மை சுற்றி கேட்கையிலும் தேவனுக்கு சாட்சியாக உண்மையான போதகரோ ஆலோசகரோ பேசும் சத்தம் தெளிவாக விளங்கும். ஏனெனில் பரிசுத்தவான்கள்சீர்படுத்தும்பொருட்டு... போதகரை ஏற்படுத்தினார் (எபே 4 : 11 – 13). ஜனங்களுடைய பக்தி விருத்திக்காகவும் ஆலோசனைக்காக ஊழியர்களை தேவன் வைத்திருக்கிறார். ஏனெனில் ஆலோசனை இல்லாத இடத்தில் ஜனங்கள் விழுந்து போவார்கள் நீதி 11 : 14 . ஆவிக்குரிய விஷயத்தில் தேவ ஊழியர்களின் ஆலோசனை அவசியமான ஒன்றாக அமைகிறது.

### 5.பாதுகாப்பு

தேவனுடைய பாதுகாப்பு ஒருவிதமான தேவ சித்தத்தின் வழிபாடுதான் வெளித்தோற்றத்திற்கு இருவேறு வாய்ப்புகள் நமக்கு உருவாகி யிருப்பதாக தெரியும். அச்சமயம் நாம் தேவனிடத்தில் விண்ணப்பம் பண்ணுவோமே யானால் ஒரு வாய்ப்பு காண வழி அடைக்கப் பட்டு விடும். இதுதான் சித்தத்தோடு நிறைந்த பாதுகாப்பு தேவனிடம் அன்புகூருகிறவர் களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கும் ரோமர் 8 : 28. வெளிப்படையாக சில காரியங்கள் நடக்க வேண்டும் தம்மை நம்புகிறவர்களுக்கு இக்கட்டு காலத்தில் அரணான கோட்டை அவர். தேவ ஜனங்க ளுடைய வாழ்வில் செய்ய நினைத்த காரியங் களை எந்த சூழ்நிலையும் தடை செய்ய இயலாது தடைகளும் கடினமான பாதையில் கர்த்தருடைய வழியில் நின்று நம்மை பிரிக்க முடியாது

### 6.மயிருள்ள ஒரு தோல்

பழைய ஏற்பாட்டிலே கிதியோன் மயிருள்ள ஒரு தோலைக் களத்திலே போட்டார் (நியாயா 6: 36 - 40). தேவன் தாம் சொன்னபடியே செய்தார். யூதர்கள் அடையாளத்தை கிறிஸ்துவினிடத்தில் கேட்ட போது மத் 12 : 38-40 ல் அவர்களுக்கு அவர் பிரதியுத்தரமாக யோனா தீர்க்கதரிசியின் அடையாளமேயன்றி வேறே அடையாளம் இவர்களுக்குக் கொடுக்கப்படுவதில்லை என்றார். அடையாளங்கள் வெளிப்படுத்தப்பட வில்லையெனில் தேவசித்தம் இருக்காது. மயிருள்ள தோல் கவனமாக கையாளப்பட வேண்டிய ஒரு பொருள். அது பழைய ஏற்பாட்டின் நாட்களில் பரிசுத்த ஆவியானவரின் அடையாளத்தில் உபயோகப்படுத்தப்பட்டுள்ளது.

### 7.தரிசனங்களும் சொப்பனங்களும்

தரிசனங்களும் சொப்பனங்களும் கவனமாக கையாளப்பட வேண்டும் அப்போ 2 : 17. சொல்கிறது பரிசுத்த ஆவியானவர் ஊற்றப்படும்



போது உங்கள் வாலிபர் தரிசனங்களை அடைவார்கள் உங்கள் மூப்பர் சொப்பனங்களை காண்பார்கள் மத் 2 : 13. யோசேப்பு சொப்பனத்தில் தேவதூதன் மூலம் எச்சரிக்கப்பட்டு எகிப்துக்குப் போகும்படி அனுப்பப்பட்டார். அந்நிய ஜாதியானோடு கலந்து அவனிடத்தில் போக்கு வரவு இருப்பது யூதர்களுக்கு விலக்கப்பட்டிருக்கிறதையும் எந்த மனுஷனையும் தீட்டுள்ளவன் என்றும் அசுத்தனென்றும் சொல் லாதப்படிக்கு தேவன் பேதுருவுக்கு ஒரு தரிசனத்தை காண்பித்தார் அப்போ 10 : 9, 10. பேதுருக்கு அந்த தரிசனத்தை ஆவியானவர் 19 : 20 வசனங்களில் நினைவு படுத்துகிறார்.

பேதுரு அந்த தரிசனத்தை குறித்து சிந்தனை பண்ணிக்கொண்டிருக்கையில்... ஒன்றுக்குஞ் சந்தேகப்படாமல் அவர்களுடனே கூடப்போ நானே அவர்களை அனுப்பினேன் என்று ஆவியானவர் அவனுக்கு சொன்னார். தேவன் தரிசனத்தின் மூலமாகவோ அல்லது சொப்பனத்தின் மூலமாகவோ நம்மோடு பேசுகையில் ஒரு சாட்சி இருக்கும். இயற்கையாக நமக்கு நித்திரையில் வரும் குழப்பமான தெளிவற்ற கனவு போல அது இருக்காது. தேவனிடத்தில் அதன் சொற்களின் அர்த்தத்தை பற்றி கேட்டு தெரிந்து கொள்ள வேண்டும்.

## தேவனுடைய சித்தத்தை எப்படி தேட முடியும்

**தேவனுடைய விருப்பத்தையும் திட்டத்தையும் அவர்தம் ஜனங்களுக்கு தேவன் வெளிப்படுத்துவார். இரகசியமாய் எப்போதும் மறைக்கப்பட்டதாய் இருக்கிறது. எப்படியாயினும் நம் கேள்விகளுக்கு எப்போதும் இடி முழக்கம் போன்ற சத்தம் வானத்திலிருந்து உண்டாகாது. தேவன் நமக்கு அருளிய வரங்களின் வல்லமையினாலே தேவ சித்தத்தை அறிந்து கொள்ள முடியும்.**

### 1.வாஞ்சையும் விருப்பமும்

தேவனுடைய விருப்பத்தை அறிந்து கொள்ள நீங்கள் விரும்பினால் முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள் அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக் கூடக் கொடுக்கப்படும். (மத்தேயு 6 : 33). பல ஜனங்கள் தேவனுக்கு முதல் இடம் கொடுப்பதில்லை ஆகவேதான் தேவ சித்தம் அறிந்து கொள்ள முடிவதில்லை. கர்த்தாவே உம்முடைய வழிகளை எனக்குக் தெரிவியும்; உம்முடைய பாதைகளை எனக்குப் போதித்தருளும் (சங்கீதம் 25 : 4-5). கர்த்தர் சாந்த குணம் உள்ளவர்களுக்கு தம் வழியைப் போதிக்கிறார் ( சங்கீதம் 25 : 9.) உன் வழிகளிலெல்லாமம் அவரை நினைத்துக் கொள்; அப்பொழுது அவர் உன் பாதைகளை செவ்வைப்படுத்துவார் (நீதி 3 : 5 - 7). சில சமயங்களில் அனுப்பப்பட்ட மின்னஞ்சலுக்கு பதில் இல்லாமலோ அல்லது சென்று சேராமல் இருந்தால் அந்த கணக்கில் ஏதோ ஒரு தவறுதல் உள்ளதாக கருதுகிறோம். அது போலத்தான் உங்கள் எண்ணங்களில் இருக்கும் களைகளை, தவறுகளை எல்லாம் எடுத்து போட்டுவிட்டு இருதயத்தில் நல் மனசாட்சியுடன் அவரைத் தேடுங்கள்.

**2.விசுவாசத்தோடு ஜெபியுங்கள்**

உங்களில் ஒருவன் ஞானத்தில் குறைவுள்ளவனாயிருந்தால் யாவருக்கும் சம்பூரணமாய் கொடுக்கிறவரும் ஒருவரையும் கடிந்து கொள்ளாதவருமாகிய தேவனிடத்தில் கேட்கக்கடவன். அப்பொழுது அவனுக்குக் கொடுக்கப்படும் (யாக்1 : 5, 6). எல்லா காரியங்களையும் தேவனிடத்தில் ஒப்புக்கொடுத்து ஜெபிக்கும்போது தேவன் ஏற்ற காலத்தில் சரியாய் செய்து முடிப்பார். தேவனை நம்பி தொடர்ந்து ஜெபத்திலே நிலைத்திருப்போமானால் நம்முடைய துக்கங்களையும், காயங்களையும் அவர் ஆற்றுவார்.

**3.தேவனோடு கிட்டி சேருங்கள்**

ஓசியா 6 : 3 ஒரு முக்கியமான சத்தியத்தை உணர்த்துகிறது. நாம் அறிவடைந்து கர்த்தரை அறியும்படி தொடர்ந்து போவோம். வெகு நாட்களாய் உங்களுக்கு பழக்கமான ஒரு நபருடைய குணாதிசயங்களை எல்லாம் நீங்கள் அறிந்து வைத்திருப்பீர்கள். அதுபோலதான் தேவனோடு நீங்கள் கொண்டுள்ள உறவும் தேவனோடு நெருங்கும்போது உலகத்தின்று தூரம் போய்விடுவோம். கர்த்தராகிய இயேசுகிறிஸ்து யார் அவர், எப்படிப்பட்டவர் என்று அதிகமதிகமாய் உணர்ந்து கொள்வோம்.

**4.அமர்ந்திருந்து அறியுங்கள்**

குழப்பமான சூழ்நிலைகளின் மத்தியில் நீங்கள் அமர்ந்திருந்து நானே தேவன் என்று அறிந்து கொள்ளுங்கள் (சங் 46 : 10). இயேசுவின் மெல்லிய சத்தம் கேட்கும் வரை அமர்ந்திருப்போம் தேவன் ஒருபோதும் நம்மை கைவிடமாட்டார்.

**5.பொறுமையாக காத்திருங்கள்**

தேவனை தேடும்போது, தேவ பிள்ளைகள் அறிந்து கொள்ள வேண்டிய ஒரு காரியம், சில பதில் தேவனிடத்திலிருந்து வரும்வரை காலங்கள் அவருடைய கரத்தில் இருப்பதால் பொறுமையாய் காத்திருக்க வேண்டும். நம் தேவைகளோடு தேவனுடைய காலங்களை கட்டுப்படுத்த முடியாது. எப்படி ஆயினும் அவர் ஏற்றவேளையில் இரக்கஞ்செய்வார் தேவனுக்காக நீங்கள் காத்திருக்கும் போது உங்களுடைய தேவபக்தியில் இன்னும் வளருவீர்கள். கர்த்தருக்கு காத்திரு (சங் 27 : 14). தேவனுடைய பதிலுக்காக காத்திருக்கும் சமயங்களில் தடுமாற்றமோ, சோர்வோ இல்லாமல் தொடர்ந்து காத்திருங்கள் நீங்களே சுயமாய் எந்த முடிவும் எடுக்காதீர்கள். அவரை நம்பி பொறுமையோடே காத்திருக்கும்போது நிச்சயமான பலன் உண்டு.

**6.தேவ சித்தத்திற்கு ஒப்புக்கொடுங்கள்**

தேவனாகிய கர்த்தர் ராஜாதி ராஜாவாய் மனுக்குலத்தை சிருஷ்டித்தபோது அவரை அறிவிக்கும் தூதர்களாக, சீஷர்களாக மனுஷரை எண்ணினார். ஆனால் மனுஷனுடைய விருப்பமோ தேவ சித்தத்திற்கு மாறாக சுயமாய் தேவனை மறந்து போன வாழ்வில் கடந்து சென்று விட்டது .இயேசு கிறிஸ்து எருசலேமை காப்பாற்ற நினைத்தார். அவர்களுக்கோ மனமில்லாமல் போயிற்று (மத் 23 : 37) . பல ஜனங்கள் தேவனுடைய சித்தத்தையும் விருப்பத்தையும் அறியாமல், தேவனுடைய ஆசீர்வாதங்களை மாத்திரம் வாஞ்சையோடு பெற்றுக்கொள்ள ஜெபிக்கிறதுண்டு பிதாவே என் சித்தத்தின்படியல்ல, உம்முடைய சித்தத்தின்படியே ஆகக்கடவது என்றார் (லூக் 22 : 42).

# கீழ்படிதலோடு நடவுங்கள்



வாழ்வின் எல்லா தருணங்களிலும் தேவனுக்கு கீழ்ப்படியுங்கள். தேவனுடையசித்தம்என்னவென்று அறியாமல் உங்கள் சுயவிருப்பங்களில் தேவனாகிய கர்த்தர் கிரியை செய்ய வேண்டும் என எண்ணாதீர்கள். தேவன் ஒருவிசை தம் சித்தத்தை உங்களுக்கு வெளிப்படுத்திவிட்டால், மிகப்பெரும் ஆச்சரியமான ஆசீர்வாதத்தை உங்களுக்கென்று வைத்திருக்கிறார். நீங்கள் மனம் பொருந்தி செவிகொடுத்தால் தேசத்தின் நன்மையை புசிப்பீர்கள் (ஏசா 1 : 19).

தேவனுடைய வழிநடத்துதலின் படி நடப்பது ஒரு மகிமையான அனுபவம். நம்முடைய இருதயத்தை தேவனுக்கு நேராக திருப்பி அவர் சித்தம் அறியும்படி விளைவோம் தொடர்ந்து தேவசமுகத்தில் காத்திருந்து, பொறுமையாய் ஜெபித்தால் ஒருநாள் தேவசத்தம் உங்களுக்கு கேட்கும் வாழ்கைப் பயணத்திலே, அவருடைய துணை எப்போதும் உங்களுக்கு அவசியம்! தேவ நாமம் மகிமைப்படட்டும்.

# கேள்வி ?

# பதில்!

### நாம் தீர்மானிக்க வேண்டிய எல்லா காரியங்களிலும் தேவனுடைய விருப்பத்தை அறிந்து கொள்ள வேண்டுமா?

இயேசு நம்மை அதிகமாய் நேசிக்கிறார். நம் வாழ்க்கையைக் குறித்த கரிசனை அவருக்கு உண்டு. ஒவ்வொரு மனுஷனின் ஆவிக்குரிய காரியங்களையும் மாத்திரமல்ல, உலகத்தில் நம்மை பாதிக்கும் காரியங்களில் இருந்து நம்மை பாதுகாத்து நம் ஜீவனைக் காக்கவும் அவர் நம்மீது வாஞ்சையாய் இருக்கிறார். பின்வரும் சில காரியங்களை ஒப்பிடுகிறேன். இதிலே தேவசித்தம் எதிர்பார்க்க விரும்பக் கூடாது. இந்த சுவற்றிற்கு சிவப்பு அல்லது நீல வண்ணம் பூசலாமா? பயணத்திற்கு இந்த பேருந்து அல்லது காரை உபயோகிக்கலாமா? இன்று இரவு உணவு அரிசி சாதம் அல்லது சப்பாத்தி சாப்பிடலாமா? இது போன்றவற்றிற்கு நம் முடிவுகளே போதுமானது. தேவையான மிக முக்கியமான அனைத்து முடிவுகளிலும் தேவ சித்தம் இருக்க வேண்டும்.

### தேவசித்தம், என்னுடைய சுய எண்ணம், சாத்தானின் திட்டம் இவைகளை எப்படி வேறுபடுத்தி கண்டுபிடிப்பது?

நம்முடைய சுய எண்ணங்கள் நேரத்திற்கு நேரம் மாறிக்கொண்டே இருக்கும். ஆனால் தேவ சத்தமோ ஒருபோதும் மாறாமல் நிலைத்திருக்கும். மனுஷனுடைய இருதயத்தின் எண்ணங்கள் அநேகம் ஆனால் கர்த்தருடைய யோசனையே நிலைநிற்கும் (நீதி 19 : 21). ஒரு மொழி பெயர்ப்பில் கூறப்படுகிறது மனுஷனுடைய மனதில் அநேக திட்டங்கள் உண்டு அப்படிப்பட்ட நம் திட்டங்களில் சந்தேகம், குழப்பங்களுண்டு தேவசத்தமானது சமாதானம் அமைதி, நிச்சயம், இதனோடு சாட்சியையும் தரும் 1 கொரி 14 : 33 சொல்கிறது தேவன் கலகத்திற்கு தேவனாயிராமல், சமாதானத்திற்கு தேவனாயிருக்கிறார். பரிசுத்தவான்களுடைய சபைகளெல்லாவற்றிலேயும் அப்படியே இருக்கிறது. நமது ஆராதனை நாயகர் இயேசு கலகத்தின் தேவன் அல்ல மாறாக நம்முடைய சுய எண்ணங்கள் தான் மனதை தாக்கும் கேள்விகளை உண்டாக்கும். கர்த்தர் பேசும்போது நம் ஆவியில் ஒரு தெளிவான பதில் உண்டாகியிருக்கும். தேவ சத்தம் தேவ வார்த்தையோடு ஒன்றாக இசைந்திருக்கும், சத்தியத்திற்கு மாறான ஒரு சத்தம் தேவ சத்தமாகவோ தேவனுடைய வழி நடத்துதலாகவோ இருக்காது.

பல வருடங்களுக்கு முன்னர் தேவ ஊழியர் ஒருவர் இரண்டு முறை திருமணம் செய்வது முறையற்றது அது தகாதது என்று போதித்தது நினைவிருக்கிறது. ஆனால் அவரும் அவருடைய சபையில் மறுமணம் செய்து கொள்வது சரிதான் தனிமையிலே யாரும் வாழ்வதை தேவன் விரும்பமாட்டார். தேவனே என்னிடம் பேசினார் என்று கூறியிருக்கிறார். நிச்சயமாக வேத வசனத்தை மீறிய இந்த சத்தியம் தேவ சத்தமாக இருக்காது. இதுபோல் தேவனுடைய வசனத்துக்கு முரணான காரியங்கள் வெளிப்படையில் அது நிச்சயமாக உங்கள் மனதில் தோன்றிய யோசனையோ அல்லது பிசாசின் உபாய தந்திரமோ அன்றி வேறொன்றுமில்லை.

சில வேளைகளில் நம் உள்ளத்திற்குள் தொனிக்கும் சில கேள்விகள் யாருடையதாக இருக்கும். கர்த்தருடைய சத்தமோ அல்லது பிசாசின் எண்ணங்களோ? என தோன்றும் கடலிலே பெருங்காற்று வீசியபோது பேதுரு எனும் இயேசுவின் சீஷர் நடந்து கொண்டதை கவனியுங்கள். ஆண்டவரே நீரேயானால் நான் ஜலத்தின் மேல் நடந்து உம்மிடத்தில் வர கட்டளையிடும் என்றான் (மத்தேயு 14 : 28). இயேசு அவர்களோடு பேசி திடன் கொள்ளுங்கள் என்றதும் பேதுரு ஜலத்தின் மேல் நடந்து போனார். ஆகவே இயேசு என்றால் ஒரு அடையாளம், சத்தியத்தின் நம்பிக்கை வெளிப்படும். பிசாசானவன் பொய்யன் அந்த வஞ்சனையின் சத்தத்தை வேறுபடுத்தி அறிந்து கொள்ளுங்கள்.

சாத்தானும், தேவ குமாரனாகிய இயேசு கிறிஸ்துவை சோதிக்கும்படி வசனங்களை உபயோகித்தான் ஆனால் சத்தியத்தின் ஒரு பகுதியை தான் அவன் எடுத்தான். அவனுடைய வார்த்தைகள் மோசம் போக்கும் உலகத்தின் இச்சைகளுக்கும், மாம்சீகத்திற்கும் ஏதுவானதாக ஆவியான தேவனை நாம் நெருங்க விடாத படிக்கு தடுப்பவையாகவே இருக்கும்

தேவனாகிய கர்த்தர் நம் குறைகள், குற்றங்கள், பாவங்களை நமக்கு சுட்டி காட்டி பேசும் போது, அதற்கு தப்பிக்கொள்ளும்படியான வழியையும் சொல்லித்தருவார். ஆனால் சாத்தானின் வார்த்தைகளோ நம் ஆவியில் கலக்கத்தை உண்டாக்கி மீட்கப்படாதபடிக்கு தடை செய்யும். பல ஜனங்கள் சில சமயங்களில் இதை வேறுபடுத்த தெரியாமல் கலங்கி தவிக்கின்றனர். எப்போதுமே மெய்யான சமாதானத்தையும் பிரச்சனைகளுககு தீர்வையும் தருகிறவர் நமது தேவன். ஆமென்.

Printed Matter -Posted Under Rule 114 & 121 P&T Guide Indian Constitution Act 25th & 19(1) Section

**TAMIL EDITION - FOR PRIVATE CIRCULATION ONLY**

உங்களுக்குத் தெரியுமா?

மதவாதிகளால் அனேக முறை இயேசு குற்றம் சாட்டப்பட்டார். பல ஜனங்கள் கர்த்தரின் சத்தத்தை தங்களுடைய சுய முடிவுகளுக்கு நியாயப்படுத்த பயன்படுத்துகின்றனர். தங்களுடைய சுய இஷ்டத்திற்கு கர்த்தரை பலிகடா ஆக்கவும் சொந்த வழிகள், கருத்துக்கள், பிறழ்வுகளுக்கு சரி என்று மற்றவர்கள் முன் பறைசாற்றத் தயங்குவதே இல்லை. ஒவ்வொரு தனிப்பட்ட மனிதனும் தங்கள் தவறுகளை ஒப்புக் கொண்டு தேவ சித்தத்தை நிதானித்து அறிந்து கொள்ள வேண்டும்.

ஏற்ற சமயத்தில் ஒரு வார்த்தை

## உன்மேல் என் கண்ணை வைத்து உனக்கு ஆலோசனை சொல்லுவேன்

உன்மேல் என் கண்ணை வைத்து உனக்கு ஆலோசனை சொல்லுவேன். நான் உனக்குப் போதித்து நீ நடக்கவேண்டிய வழியை உனக்குக் காட்டுவேன்; உன்மேல் என் கண்ணை வைத்து, உனக்கு ஆலோசனை சொல்லுவேன் சங்கீதம் 32 : 8



துயரங்களும், குழப்பமும் நிறைந்த இந்த உலகத்தில் என்ன ஒரு அற்புதமான தேவ வார்த்தையை தாவீதுக்கு கர்த்தர் கொடுத்திருக்கிறார்.தேவன் இன்றும் இதே வார்த்தையை நமக்கும் தருகிறார். நிச்சயமாகவே வழியை உனக்குக் காட்டுவேன் என்கிறார்.பாதை குறிப்பிடப்படாத பெருங்கடலில் கூட வழிகாட்டியாக இருப்பார்; எப்பக்கத்திலும் நெருக்கப்படும்போது கிறிஸ்துவே நமக்கு தலைவராகவும் வாழ்வும் கஷ்டமான சூழ்நிலைகளில் போதகராகவும் இருப்பார். குழப்பங்களிலும், தடுமாற்றத்தின் வேலையிலும் அவரே நமக்கு ஆலோசகர். நாம் பாதை மாறும் போது அவரே நம் நல் மேய்ப்பர் வாழ்வின் இருளான சமயத்தில் வெளிச்சம் அவர் நிச்சயமற்ற நிலையில் அவரே நம் நம்பிக்கை.நாளையைகுறித்து நம்பிக்கை இல்லாத இந்த உலகில், எதிர்காலத்தைக் குறித்து நாம் சிந்திக்க இயலாது. நமக்கு முன் எத்தனை ஆபத்துகளும் கண்ணிகளும் எதிர்கொள்ள வேண்டியிருக்கிறது என்று நாம் அறிய முடியாது. ஆகவே தான் இயேசு கூறுகிறார் உன்மேல் என் கண்ணை வைத்து உனக்கு ஆலோசனை சொல்லுவேன். ஆம் நம்முன் இருக்கும் தடைகளை உடைத்து போட்டு வழிகளை உண்டாக்குபவர் அவர். நம் கால் இடராதபடிக்கு அவருடைய தூதர்கள் நம்மை ஏந்திக் கொண்டு போவார்கள். மனுஷீகமாக நாம் தவறும் போது நம்மை தேடி, அவர் தம் பாதையில் சேர்த்துக் கொள்வார்.

நம் வாழ்வில் நாம் சந்திக்கும் அநேக பிரச்சனைகளுக்கு நாம் முடிவெடுப்பதில் பலவீனமாகவும், அதற்கு போதுமான ஞானமற்றவர்களாகவும் இருப்போம். இப்படிப்பட்ட சமயங்களில் தேவன் நம் வழிகாட்டியாக இருந்து உதவி செய்வார். அவருடைய கண்கள் எப்போதும் நம்மேல் நோக்கமாக இருக்கும். தேவ பிள்ளைகளாகிய நாம் பயப்பட தேவையில்லை, அவர் நம்மை தேற்றி அரவணைப்பார். தமக்குப் பயந்து, தமது கிருபைக்குக் காத்திருக்கிறவர்களின் ஆத்துமாக்களை மரணத்திற்கு விலக்கி விடுவிக்கவும்; சங் 33 : 18. தேவன் எல்லா ஜனத்தின் மேலும் கரிசனையுள்ளவர். ஆனால் உண்மையாய் தம்மைத் தேடி, விசுவாசிக்கிற ஜனங்களுக்கு அவர் மிகுந்த அக்கறை உள்ள தேவன். கூப்பிடும் காக்கை குஞ்சுகளுக்கும் பதில் தருகிற தேவன். தைரியமாய் இருங்கள் அவர் நம்மை திடப்படுத்தி அக்கரைக்கு சேர்ப்பார். ■

CONTACT :-

**The Editor,
Gospel Truth,
P.O. Box - 54
Pollachi Town
INDIA - 642 001.**

Email :
vedhacog1954@gmail.com

**கர்த்தருக்கு பரிசுத்தம்**

THE CHURCH OF GOD *Worship Place:*

**Church Street, Kolarpatti, Pollachi - 642 107**

**தேவசபை** ஆராதனை நடைபெறும் இடம் :

**சர்ச் தெரு, கோலார்பட்டி, பொள்ளாச்சி - 642 107**

SUNDAY SERVICE : 10 AM - **ஞாயிறு ஆராதனை : காலை 10 மணி**

எந்த சபைக்கும் போகாதவர்கள் எங்களுடன் பரிசுத்த ஆராதனையில் கலந்துகொள்ள அழைக்கின்றோம்.

Come & Worship with Real Truth

Tamil Editor : W.S.VEDHA, THE CHURCH OF GOD, 2/227 -KOLARPATTI, POLLACHI TALUK, SOUTH INDIA - 642 107. Phone : 04259 - 280488 Cell : 95975 62641.

Team : V.Selvam, V.Jayanathan Gnanarajan, J.Grace Johnsy, V.J.Sam kirubaharan

Printer : Joy Printers, Pollachi - 642 001. Cell : 96592 54316